சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

OS 115/2022

29.04.2026.

DW - 2

பி.வா.சா.1. ரேவதி, க/பெ. சசிக்குமார் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

வழக்கு சொத்தின் சர்வே எண், நான்கெல்லை மற்றும் விஸ்தீரணம் குறித்து எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் - சரிதான். வாதி சசிக்குமார் எனக்கு உறவினர் என்றால் - ஒன்று விட்ட மாமா ஆவார். எனது சகோதரியை தான் சசிக்குமார் சகோதரருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது என்றால் - சரிதான். எனக்கு 24.10.2007 ல் திருமணம் நடைப்பெற்றது என்றால் - சரிதான். எனது பெற்றோர் ஊர் வேதாரண்யம் தாலுக்கா கோடியக்கரை என்றால் - சரிதான். எனது கணவர் சசிக்குமாருக்கு நீடாமங்கலம் என்றால் - சரிதான். திருமணத்திற்கு பிறகு அரவிந்த் பாரதி மற்றும் அஞ்சு யாழினி என்ற இரண்டு குழந்தைகள் உள்ளனர் என்றால் - சரிதான். நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள கோயம்புத்தூர் முகவரியில் தான் வசிக்கிறேன் என்றால் - சரிதான். திருமணத்திற்கு முன்பும் பின்பும் எனக்கு வருமானம் எதுவும் இல்லை என்றால் - சரிதான். வழக்கு சொத்து எங்குள்ளது என்றால் - திருவாரூர் மாவட்டம், அம்மையப்பன், காவனூரில் உள்ளது. வழக்கு சொத்தில் க.எண்.1/154/1 என்ற வீடு உள்ளது என்றால் - சரிதான். எந்த புல எண்ணில் வீடு உள்ளது என்றால் - குறிப்பிட்டு சர்வே எண்ணை சொல்ல முடியாது. வழக்கு சொத்து 2009 ல் கிரயம் வாங்கப்பட்டது என்றால் - சரிதான். வழக்கு சொத்து கிரயம் வாங்கப்பட்ட சமயத்தில் எனது கணவர் வெளிநாட்டில் இருந்தார் என்றால் - சரிதான். திருமணத்திற்கு பிறகு எப்போது எனது கணவர் வெளிநாடு சென்றார் என்றால் - என் மகன் 7 மாதம் வயிற்றில் இருந்தபோது சென்றார். வழக்கில், எனது கணவரின் வெளிநாட்டு வாழ் இந்தியருக்கான வங்கி கணக்கில் கடன் பெற்றதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் - சரிதான். எனது கணவரின் வங்கி கணக்கு எண் மற்றும் கடன் வாங்கிய தொகையில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் - இல்லை. வழக்கு சொத்து கிரயம் பெறப்பட்ட பிறகு 5 ம் பிரதி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கடன் வாங்கி தான் வீடு கட்டப்பட்டது என்றால் - சரிதான். கடன் தொகை எல்லாவற்றையும் NRI கணக்கு மூலமாக வங்கிக்கு செலுத்திவிடுவார் என்றால் - சரிதான். எனது கணவர் கடைசியாக இந்தியா எப்போது வந்தார் என்றால் - 2021 ம் ஆண்டு வந்தார். 2021 ம் ஆண்டு கொரனா தடைக்காலம் நடைமுறையில் இருந்தது என்றால் - சரிதான். நான் எந்த ஆண்டிலிருந்து கோயம்புத்தூரில் வசிக்கிறேன் என்றால் - 2010 லிருந்து வசிக்கிறேன். 2021 ம் ஆண்டில் வழக்கு சொத்துள்ள வீட்டில் வசித்தேனா என்றால் - இந்த வீட்டில் தான் வசித்தேன். கோயம்புத்தூர் போய்விட்டு வருவேன். எனது கணவர் வெளிநாட்டிலிருந்து வந்தபோது எங்களை காணவில்லை 19.04.2021 ம் தேதியன்று கொரடாச்சேரி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் - சரிதான். எனது பெற்றோருக்கும் தகவல் சொன்னார் என்றால் - சரியல்ல. கொரடாச்சேரி காவல்நிலையத்தில் எனது கணவர் கொடுத்த புகாரின், அடிப்படையில் என்னை விசாரித்தார்களா என்றால் - விசாரித்தார்கள். நான் அப்போதே எனது கணவருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்று சொல்லிவிட்டேன் என்றால் -

இருவரும் தான் சொன்னோம். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் சமயத்திலேயே நான் விவாகரத்து கேட்டு திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் - சரிதான். அவர் கையெழுத்து கேட்டதால் தாக்கல் செய்தேன். திருவாரூர் மகளிர் நீதிமன்றத்தில் குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழும் மனு தாக்கல் செய்தேன் என்றால் - சரிதான். நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூல தேதிக்கு முன்னரே எனக்கும் சசிக்குமாருக்கும் விவாகரத்து கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் - சரிதான். நான் இந்த வழக்கில் எனது கணவர் தாக்கல் செய்த வழக்குரைக்கு எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரிதான். எதிர் வழக்குரையில், எனது தகப்பனார் கொடுத்த பணத்தில் தான் வழக்கு சொத்து வாங்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் - சரிதான். எனது தகப்பனார் வனத்துறையில் வனவராக வேலை செய்தார். எனது குடும்பத்தில் மொத்தம் எத்தனை நபர்கள் என்றால் - 1 ஆண் மற்றும் 4 பெண்கள் ஆகும். எனது தகப்பனார் எப்போது வனத்துறையிலிருந்து ஓய்வு பெற்றார் என்றால் - 2008 அல்லது 2009 என சரியாக தெரியவில்லை. எனது தகப்பனார் தற்போது உயிருடன் உள்ளார். எனது தகப்பனாரை விசாரித்தால் எதன் அடிப்படையில் வழக்கு சொத்து வாங்கப்பட்டது என்ற விவரம் தெரிய வரும் என்றால் - சரிதான். கோயம்புத்துரில் என்ன வேலை செய்கிறேன் என்றால் - தற்போது சமையல் வேலை செய்து வருகிறேன். **(வாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).**

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,

சார்பு நீதிபதி

மன்னார்குடி.